| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 29.10.2025 | |
| CC.No.30/2025 | |
| சாட்சி : PW1 (Recall) | |
| பெயர் : திருமதி. அம்பிகா | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. வெங்கடசுப்பிரமணி | தொழில் : வீட்டுகுடித்தனம் |
| கிராமம் : சிலம்பபப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 30/2025 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனக்கு 26.11.2024 ம் தேதியன்று வி.சஷ்விதாஸ்ரீ என்ற பெண்குழந்தை மாவட்ட தலைமை மருத்துவமனை மணப்பாறையில் பிறந்தது என்றால் சரிதான். அந்த குழந்தைக்கு அப்பா எனது கணவர் வெங்கடசுப்பிரமணியன் என்றால் சரிதான். நான் வெங்கடசுப்பிரமணியன் என்பவருடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். குணசேகர் மற்றும் அவர்களுது குடுமபத்தார்கள் மீது வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்துவதாக இந்த வழக்கு சிசி 30/2022 ன் படி இந்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான்.

2. சஷ்விதாஸ்ரீ என்ற பெண் குழந்தைக்கு தாய் அம்பிகா, தந்தை வெங்கடசுப்பிரமணியன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சஷ்விதாஸ் பெண் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் தற்போது என்னிடம் காட்டப்படும் சான்றிதழ் என்றால் சரிதான். **அது எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வெங்கடசுப்பிரணியனோடு சேர்ந்து வாழ்ந்து கொண்டுதான் எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.** 1ம் எதிரியுடன் பிரச்சனை ஏற்பட்டு 3 வருடங்கள் பிரிந்து இருந்த நிலையில் தான் வெங்கடசுப்பிரமணியனை திருமணம் செய்து கொண்டேன். எனது வாழ்க்கையில் நடந்த உண்மைகளை மறைத்து எதிரிகளை பழிவாங்க

வேண்டும் என்பதற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அடித்து கொடுமைப்படுத்தியதால் புகார் கொடுத்துவிட்டு ஊரில் பேசி முடித்த பின்னர் தான் நான் திருமணம் செய்தேன்.

**அரசு தரப்பு மறு விசாரணை**

2. எனது கணவரோடு வாழ்ந்த காலக்கட்டத்தில் எனக்கும், வெங்கட்சுப்பிரமணியனுக்கும் எந்த தொடர்பும் கிடையாது. 2021 ம் ஆண்டு புகார் கொடுக்கப்பட்டது. 21.01.2024 அன்று வெங்கடசுப்பிரமணியனை திருமணம் செய்து கொண்டேன்.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.